**வெலிகந்த பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 16 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெலிகந்த பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் குப்பை வரி வருமானத்தினுள் 2017 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை குப்பை வரி வருமானம் ரூபா 200,900 உள்ளடங்கியிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து அகற்றப்பட்டு திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் ஆண்டிற்குரிய வருமானங்கள் மாத்திரம் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாக பட்டியலிடப்பட்ட நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு | ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அந்த பணத்தொகையை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 வருமானத் தலைப்புகளுக்குரிய நிலுவை வருமானம் (பி.ச. 7) மற்றும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட நிலுவை வருமான மீதிகளை ரூபா 44,537,559 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன. | உரிய வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானத் தலைப்புகளை ஒதுக்கீடு செய்யும் போது குறியீட்டு இலக்கங்கள் மாற்றமடைந்தமையால் அந்த மீதிகளுக்கிடையேயான வேறுபாடுகள் நிலவின. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| | | |
|---|---|---|
| உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 366,761,372 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெறுமதிகளை உறுதிப்படுத்தி சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டியமை. | உரித்தினை உறுதிப்படுத்தல் தொடர்பில் தீர்ப்பனவு தகவல்கள் சபைக்கு சொந்தமாக இல்லாதிருந்தமையை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், எதிர்காலத்தில் முறையான விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கின்றேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் 03 முதல் 17 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்குரிய அறவிடப்படாது காணப்படும் 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 493,615 ஆகும். | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த செலவின கடன் பட்டோர் மீதிகள் 04 இற்குரிய ரூபா 468,474 கூட்டுத்தொகையாக இருந்ததுடன், அவை 2005 ஆம் ஆண்டு முதல் தீர்ப்பனவு செய்யாது காணப்பட்டது. | கடன் மீதிகளின் சரியான தன்மை உறுதி செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பில் தேடிப்பார்த்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் செலுத்த வேண்டிய ஊழியர் கடன் மீதிகளாக குறிப்பிடப்பட்ட ரூபா 32,049 ஆன தொகை இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான தன்மை உறுதி செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் இது தொடர்பில் தேடிப்பார்த்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமணாக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2/2018 மற்றும் 2018/12/8 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 02(viii) பிரிவு | நிதி தொடர்பில் செயற்படும் அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்புகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணையினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வின் போது 598 வாசிகசாலை புத்தகங்களை கைத்தவிர்புச் சபையொன்றினை நியமிக்காது அங்கீகாரமின்றி மதிப்பாய்வினை மேற்கொண்ட உத்தியோகத்தரால் அழிக்கப்பட்டிருந்தது. | மதிப்பாய்வு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் கைத்தவிர்புச் சபையொன்றின் மூலம் கைத்தவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,346,930 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 770,804 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 493,600 | 392,600 | 191,700 | 200,900 | 909,600 | 365,000 | 365,000 | - |
| வாடகை | 4,922,946 | 1,930,640 | 1,794,504 | 2,698,150 | 5,667,900 | 4,495,116 | 2,823,900 | 2,562,014 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,338,750 | 2,759,810 | 2,759,810 | 651,475 | 1,067,500 | 326,720 | 330,045 | 651,475 |
| ஏனைய வருமானம் | 38,771,388 | 37,360,067 | 32,814,087 | 16,484,695 | 30,639,400 | 5,053,617 | 17,610,917 | 11,938,714 |
| மொத்தம் | 45,526,684 | 42,443,118 | 37,560,101 | 20,035,220 | 38,284,400 | 10,240,453 | 21,129,862 | 15,152,204 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 45,526,685 ஆன போதிலும், அவற்றுள் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 42,443,118 ஆனமையால் ரூபா 3,083,567 ஆன மிகை மதிப்பீடொன்று நிலவியதுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வருமானம் ரூபா 20,035,221 ஆக இருந்தது. | சரியான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதவரியும் வரியும் மற்றும் வாடகை வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக 39 சதவீதம் மற்றும் 36 சதவீதம் வரையான குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது வரையிலும் மதிப்பாய்வுகளின் மூலம் அனைத்து வியாபார இடங்களை இனங்கண்டு வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.2.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001/2002 ஆம் ஆண்டுகளின் கட்டுவன்வில இறைச்சிக்கடை மற்றும் வெலிகந்த வாரச்சந்தை மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 208,875 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 2007 மற்றும் 2008 காலப்பகுதியினுள் 07 நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த இறைச்சிக்கடை மற்றும் வாரச்சந்தைகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 401,693 ஆன தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | செவனப்பிட்டியவிலுள்ள 31 கடைகளின் நிலுவை கடை வாடகை வருமானம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,080,583 ஆக இருந்ததுடன், அவற்றுள் 1-2 மேற்பட்ட காலமாக கடை வாடகை செலுத்தப்பட்டிராத 23 கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,511,632 ஆகும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | வெலிகந்த வாரச்சந்தையை குத்தகைக்கு வழங்குவதின் அடிப்படையில் கேள்வித் தொகையில் எஞ்சிய 50 சதவீதமான அளவான ரூபா 805,750 தொகை 2017 யூன் 31 ஆந் திகதி வரையிலும் அந்த நிலுவைத் தொகை மற்றும் தண்டப்பணங்களான ரூபா 117,313 தொகை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் பிரதேச சபைகள் அதிகாரப் பிரதேசத்தில் 19 பண்ணைகள் உள்ளதாக இனங்காணப்பட்டுள்ள போதிலும், 2018 ஆம் ஆண்டிற்குரிய அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிட்டிருந்த பண்ணைகளின் எண்ணிக்கை 04 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | அதிகாரப் பிரதேசத்தின் அனைத்து பண்ணைகளின் மூலமும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த இடங்களிலிருந்து பணம் அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 512 நிறுவனங்களிடமிருந்து கட்டணங்களை அறவிட்டுள்ள நிறுவனங்கள் / விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை 165 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரியதாக நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் எவையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதிகாரப் பிரதேசத்தின் அனைத்து விற்பனை நிலையங்களின் மூலமும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த இடங்களிலிருந்து பணம் அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பெ வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 9,082,143 தொகை 2019 ஏப்ரல் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நீதிமன்ற தண்டப்பணங்களும் இனங்காணப்பட்டு சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எஞ்சிய பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |

**2.2.7 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ருஹுணு நீர் செயற்திட்டத்தில் 2017 ஆம் ஆண்டின் 741 நீர் பாவனையாளர்களிடமிருந்து மற்றும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 741 நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 5,915,070 ஆகும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இன்றளவில் நீர் கட்டணங்கள் அறவிடப்படுவதாக குறிப்பிடுகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 10 பணிகளுக்காக வஷஉபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதித்து அந்த பணிகளை மேற்பார்வை செய்து கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | 2019 சனவரி 11 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் சபை அறிந்திருந்த | சபையின் நோக்கங்கள் இனங்காணப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அந்த நோக்கங்களிடையே சபைக்குரிய நோக்கங்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | பாதீட்டினை தயாரிக்கும் போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | அறிவுரைகளுக்க மைய செயற்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | இலக்குகளை அண்மிக்கும் போது உரிய பணிகளை கண்காணிப்பதற்கான அடைவுகள் இனங்காணப்பட்டிராததமையால், குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | தரவுகளை சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியமை. | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | இலக்குகளை அண்மிப்பதற்காக நிறுவனத்தின் பதவியணியை பயிற்றுவிக்கும் நடைமுறையொன்று காணப்படாமையால், நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் 03 வாகனங்களின் உரித்தினை பெற்றுக்கொள்ள மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் வாசிகசாலையின் அங்கத்தவர்களுக்கு இரவலாக பெற்றுச் செல்வதற்கு வழங்கப்பட்டுள்ள 172 நூலக புத்தகங்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 172 புத்தகங்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த புத்தகங்களை நூலகத்திற்கு பெற்றுக்கொள்வதற்குரிய கடிதங்களை அங்கத்தவர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | சபைக்கு சொந்தமான ரூபா 307,738,611 தொகையான 47 உருப்படிகளை கொண்ட காணி மற்றும் கட்டிடங்களின் உரித்தானது சபையிடம் காணப்படவில்லை. | உரித்தினை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இந்த காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | பொது மக்களின் பயன்பாட்டிற்காக திவி நெகும திணைக்களத்திடமிருந்து 2014 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த 368 கல்வனைசு கொடிக் கம்பங்களில் முன்னாள் சபையின் அங்கத்தவர்களால் கொண்டுசெல்லப்பட்டிருந்த 213 கொடிக் கம்பங்கள் உள்ளடங்களாக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் தொலைந்து போயிருந்த ரூபா 283,428 பெறுமதியான 256 கொடிக் கம்பங்களை சபைக்கு மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 256 கொடிக் கம்பங்களை சபைக்கு மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவற்றை கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூட்ட அமர்வின் போது அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்றாம் நிலையிலுள்ள செயலாளர் பதவி, இரண்டாம் நிலையிலுள்ள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிகள் 06, முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்று, தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியொன்று மற்றம் வருமானப் பரிசோதகர் பதவியொன்றும் பல வருடங்க்ளாக வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உத்தியோத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்பித்தருமாறு உள்ளூராட்சி ஆணையாளரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக பதிலீட்டு, அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் சுகாதார தொழிலாளர் பதவிகள் இரண்டு, 03 காவலாளி பதவிகள் மற்றும் சாரதி பதவியொன்றிற்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் , இந்த பதவிகளின் தேவைப்பாட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கி அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவிகளின் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிரந்தர உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்படாது சபையின் சிறாப்பர் பதவிக்காக வீதி தொழிலாளர் உத்தியோகத்தர் ஒருவரும், வருமானப் பரிசோதகர் பதவிக்காக நீர்ப் பம்பி இயக்குநர் ஒருவரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உரிய பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையால் அதற்கமைய சேவையில் ஈடுபடுத்த நேர்ந்துள்ளது. |
| (ஈ) | 2013/2014 மற்றும் 2015 மே வரையான காலப்பகுதியினுள் இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 127,035 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (உ) | இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள 04 உத்தியோகத்தர்கள் இன்றளவில் பணி வறிதாக்கப்பட்டமை மற்றும் மரணமடைந்தமையால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 326,913 பெறுமதியான கடனை அறவிட முடியாதிருந்தது. | கடன் பட்டோரிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வட மத்திய மாகாண பிரதம அமைச்சினூடாக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 613,500 பெறுமதியான அரிசி மாவுடன் தொடர்புடைய உற்பத்திகளின் தொகுதியொன்று 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது இற்றுப் போனவாறு காணப்பட்டது. | சொத்தினை பயன்படுத்தக்கூடிய மற்றுமொரு அரச நிறுவனத்திற்கு அல்லது மற்றுமொரு பணிக்கு கையளித்தல், பயன்படுத்த முடியாதெனின் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபைக்கு சொந்தமான செவனபிட்டிய கடைகளின் நிலுவை பணம் தொடர்பில் பதிற்கடமை தளப் பரிசோதகர் ஒருவரால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 460,600 இற்கு அண்மிய தொகையொன்று மோசடி தொடர்பான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி மோசடி தொடர்பில் விசாரணைகள் துரதமாக மேற்கொள்ளப்பட வேண்டியமை. | இது வரையிலும் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மதிப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு | சபையின் ஆதனங்களின் பற்றாக்குறை தொடர்பில் | எதிர்காலத்தில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| பயன்பாட்டு பதிவேட்டின் பிரகாரம் 497 புத்தகங்களின் பற்றாக்குறையொன்று காணப்படுவதாக இனங்காணப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணைகளை துரதமாக மேற்கொள்ள வேண்டும். | |

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட அச்சுக்கற்களை (Interlock) பதித்து ஒழுங்கமைக்கப்பட்ட இரு வீதிகளின் பக்கச்சுவர்கள் (Curb Wall) இற்காக ரூபா 121,130 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுதியவைகளை மீள அறவிட வேண்டும். | உரிய தொகையினை கழித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து பணிகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளக கணக்காய்வொன்றி னை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கின்றேன். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய பிரதான செயலாளரின் என்சீபீ/சீஏ/01 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய கடித்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒரு தடவையும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 02 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை உரிய முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |